[1980 பிப்ரவரி 11

துடியலூர் கோயில்பாளையம் வாரச்சந்தை.

*வினா எண். 108: திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையை அடுத்த துடியலூர் கோயில்பாளையம் வாரச் சந்தையில் அரசு நிர்ணயித்த விகிதத்திற்கு மேலாகக் கட்டணம் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கட்டண வசூலுக்கு முறையான ரசீது வழங்கப் படுகிறதா ?

(இ) அதிகக் கட்டண வசூலைத் தடுத்து நிறுத்தவும், முறையாக ரசீது வழங்கவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) அவ்வாறு வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே. கோயில்பாளையம். துடியலூர் சந்தைகளைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு வரி வசூல் நடக்கக்கூடிய விஷயத்தில் அதிகபாக நடக்கிறது என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற செய்தி அந்த வரியை கான்ட்ராக்ட் விட்டு. டெண்டர் விட்டு தனியார் வசூல் செய்வதற்குப் பதிலாக அரசே நேரடியாக அந்த சந்தைகளில் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. இதிலே அரசு தலையிட முடியாது.

கிணத்துக்கடவு ஒன்றியப் பகுதியில் உள்ள பம்புசெட்டுகள்.

*வினா எண் 109 : திரு. கா. வே. நஞ்சசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிணத்துக்கடவு ஒன்றியத்தில் இருக்கும் பல ஆழ்குழாய் பம்புசெட்டுகள் ஒரு வருடத்திற்கு மேலாக வேலை செய்வது இல்லை என்பது உண்மையா ?

1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு கா காளிமுத்து : கிணத்துக்கடவு ஒன்றியத்தில். தேவராயபுரம் ஊராட்சியைச் சேர்ந்த நல்லிகவுண்டன் பாளையத்திலுள்ள குழாய்க் கிணற்றில் பொருத்தப்பட்ட நீர் மூழ்கி மோட்டார் பம்புசெட் மட்டுமே பழுதடைந்து, இயங்காமல் உள்ளது

திரு. கா. வே கந்தசாமி : தலைவரவர்களே. ஓராண்டுக் காலமாகியும் இன்னும் பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. அதைப்போல இன்னும் 3, 4 ஆழ்குழாய்க் கிணறுகளில் பம்புசெட் பழுது ஏற்பட்டு. இன்னும் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. பலமுறை இதுபற்றி நான் கலெக்டருக்கு மனு எழுதியும். பி.டி.ஓ.க்கு சொல்லியும் இன்னும் பழுது பார்க்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? உடனடியாக பழுது பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கா, காளிமுத்து : தலைவரவர்களே, கிணத்துக்கடவு ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில் நல்லிக்கவுண்டன் பாளையத்தைப் பற்றி மட்டும்தான் தகவல் இருக்கிறது. மற்ற இடங்கள் பற்றி தகவல் இல்லை. ஒருவேளை அவை பழுது பார்க்கப்பட்டிருக்கலாம், புகார் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு, மு, செல்வராஜ் : தலைவரவர்களே. பொதுவாக தமிழ் நாட்டிலே பெரும்பாலான பஞ்சாயத்து யூனியன்களில் கிராமங்களில் இருக்கிற இப்படிப்பட்ட குடிநீர் திட்ட பம்புசெட்டுகள் பழுதடைந்துவிட்டால். அவைகளை குடிநீர் வாரியம் பழுது பார்த்து செயல்படச் செய்ய வேண்டுமென்ற உத்தரவு இருப்பதால் பழுது ஏற்பட்ட பம்புசெட்டுகள் பல மாதங்கள் ஆகியும், பழுதுபார்க்கப்படாத கிராமங்கள் பல இருக்கின்றன. அதனால் குடிநீர் பற்றாககுறை ஏற்படுகிறது இதைத் தவிர்கக உடனடியாக நடவடிக்கை எடுககப்படுமா ?

மாண்புமிகு திரு, கா, காளிமுத்து : தலைவரவர்களே, இதை ஆழ்ந்து பார்த்து, எந்த வகையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பதை பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுககப்படும்.

திரு, சி, அறுமுகம் : தலைவரவர்களே, பொதுவாக கிராமங்களில் இருக்கிற பம்புசெட்டுகள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கிணத்துக்கடவு பற்றிய கேள்வி,

[1980 பிப்ரவரி 11

திரு. சி. ஆறுமுகம் : பொதுவாக என்று குறிப்பிட்டுவிட்டுத் தான் கேள்வியை ஜாக்கிரதையாகக் கேட்கிறேன். கேள்வி கிணத்துக்கடவு பற்றியதாக இருந்தாலும் பொதுவாக பம்புசெட்டுகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன, பழுது பார்ப்பதற்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நபர்தான் வைக்கப்பட்டிருக்கிறார், உடனுக்குடன் பழுது பார்ப்பதற்காக ஒன்றியத்திற்கு 2 அல்லது 3 பேர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திரு. ஆறுமுகத்தின் யோசனையை அரசு பரிசீலிக்கும்,

திரு, ரா, வெங்கிடசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே. கிணத்துக்கடவு ஒன்றியத்தில் மோட்டார் பம்புசெட் கெட்டுப்போன காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது, அப்படித் தண்ணீர் கிடைக்காத மக்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு மாற்று ஏற்பாடு என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே. நான் குறிப்பிட்ட நல்லிக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்தமட்டில் ஆழ்குழாய்க் கிணற்று பம்புசெட் பழுதடைந்துவிட்டதால், அதற்குப் பக்கத்தில் இன்னொரு கிணறு வெட்டி பம்புசெட் பொறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, பழுது ஏற்பட்டால் அதை சீர் செய்யவோ, மாற்று ஏற்பாடு செய்யவோ அரசு நிச்சயமாக முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் சோறு இல்லாமல் ஒரு மாதம் கூட சும்மா இருக்க முடியும். குடிக்கத் தண்ணீர் இல்லை என்றால் 2 அல்லது 3 மணி நேரம் கூட தாக்குப்பிடிக்க முடியாது, ஆகவே பழுது ஏற்பட்டுவிட்டால் அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களே டெண்டர் கால் பார் செய்து, உடனடியாக அதைப் பழுது பார்ப்பதற்கு உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆரம்பத்திலேயே பதில் சொல்லி இருக்கிறேன்,

உடையார்பாளையம் நகருக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 110: திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் நகரத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும் ?